பால்நிலை கண்காணிப்பு: ஸ்திரத்தன்மை எனும் பெயரில் அதிகளவில் துயரத்தினை திணித்தல்...............................................

பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாதக் குழுமம்

இலங்கையில் முன்னரில்லாத அளவிற்கு வகுப்பு பிரிவினை தெளிவாகத்தெரியுமளவிற்கு கடந்த சில மாதங்களில் பொருளாதாரரீதியான சவால்கள் அதிகரித்திருக்கின்றன, அரசாங்கமானது அரச ஒடுக்குமுறையின்மூலம் நாட்டில் ஸ்திரத்தன்மையினை ஏற்படுத்துவதில் முழுக்கவனத்தினையும் செலுத்துகின்றது. இலங்கையின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதிலிருந்து அரகாலயா, மக்களின் போராட்டத்திலீடுபட்ட மாணவர் சங்க தலைவர்கள், செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள் மற்றும் வேறுபல மக்கள் போராளிகளுக்கெதிரான நடவடிக்கைகள் தீவிரமடைந்திருக்கின்றன. 3,300இற்கும் மேற்பட்ட செயற்பாட்டாளர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும், 1,250 பேர் தற்போதும் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தினைப் பயன்படுத்துவதனை தற்காலிகமாக நிறுத்துவது தொடர்பில் அரசாங்கம் தாமாகவே உறுதிபூண்டிருப்பதையும்மீறி மாணவர் தலைவர்களைத் தடுத்துவைப்பதற்கு அதனைப் பயன்படுத்தியிருக்கின்றது. அடக்குமுறை மற்றும் பொருளாதார கொள்கை போன்றன தொழிலாளர் வர்க்க பெண்கள் மற்றும் குறைந்த வருமானத்தினைப் பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள் போன்றவற்றிற்கு ஏற்படுத்துகின்ற பாரிய ஸ்திரத்தன்மையற்ற நிலையே அன்றாட ஒழுங்காக இருக்கின்றது.

**இடைக்கால பாதீடு** - பாராளுமன்றமானது, பாரிய சிக்கனப்படுத்தல் நடவடிக்கைகளையும், அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதனையும் அறிமுகப்படுத்தும் இடைக்கால பாதீடொன்றினை நிறைவேற்றியுள்ளது. பெறுமதி சேர்க்கப்பட்ட வரியானது 12%இலிருந்து 15%ஆக திருத்தப்பட்டிருப்பதுடன், நேரடியான வரிகள் மேலும் அதிகரித்திருக்கின்றன. இவை அத்தியாவசியப் பொருட்களின் விலைகளின் வீக்கமானது கற்பனைக்கெட்டாத மட்டங்களை எட்டியிருக்கும் நிலையில் நிகழ்ந்திருக்கின்றது. இடைக்கால பாதீட்டிலுள்ள சமூகப்பாதுகாப்பிற்கான முன்மொழிவுகள் கர்ப்பந்தரித்துள்ள தாய்மாருக்கான தற்போதுள்ள அரச ஆதரவினை (2500ரூபாயினாலும்), சமுர்த்தி மாதாந்த கொடுப்பனவினை (3000ரூபாயிலிருந்து 3100ரூபாயாகவும்), வயதுமுதிர்ந்தோர் கொடுப்பனவினை (2000ரூபாயிலிருந்து 5000ரூபாயாகவும்), குறைந்த வருமானத்தினைப் பெறுகின்ற மாற்றுத்திறனாளிகள் மற்றும் குறைந்த வருமானத்தினைப் பெறுகின்ற சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவினை (5000ரூபாயிலிருந்து 7500 ரூபாயாகவும்) அதிகரித்திருக்கின்றன. மேலதிகமாக, குறைந்த வருமானத்தினைப் பெறுகின்ற 61,000 குடும்பங்களுக்கு 5000ரூபாய் வழங்கப்படவுள்ளன. தற்போதுள்ள பொருள்வீக்க மட்டங்களினைக் கருத்தில் கொள்ளும்போது இந் நடவடிக்கைகள் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்குக்கூட கட்டுப்படியாகாதநிலையில் மிகவும் போதாமையுடையவையாக உள்ளன.

உணவுவீக்கமானது ஆகஸ்ட் மாதத்தில் பாரிய அதிர்ச்சியினை ஏற்படுத்தும்விதத்தில் 93.7%இற்கும், போக்குவரத்து 148.6%இற்கும் அதிகரித்திருந்தது. இந்நெருக்கடியினை உணர்வதற்கு முன்னரே, இலங்கையானது மொத்த தேசிய உற்பத்தியின் 3.2%இனை மட்டுமே சமூகப்பாதுகாப்பிற்கென செலவுசெய்தது, இது ஆசியாவிலேயே மிகவும் குறைந்த ஒதுக்கீடாகும். அத்துடன் இது மத்தியதர வருமானத்தினைப்பெறும் நாடுகள் மேற்கொள்ளும் 3.9% சராசரி செலவினைவிடவும் குறைந்ததாக இருக்கின்றது. உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பீட்டின்படி நான்குபேர் கொண்டதோர் குடும்பம் வாழ்வதற்கு மாதாந்தம் 100,000ரூபாய் தேவைப்படுகின்றது. மேலும், பத்தில் மூன்று குடும்பங்கள்(6.26 மில்லியன் மக்கள்) உணவுப்பாதுகாப்பற்றநிலையிலும், அதில் 65,600பேர் தீவிரமான உணவுப்பாதுகாப்பற்ற நிலையிலும் உள்ளனர். யுனிசெப்பினுடைய கணிப்பீடானது, 2.3 மில்லியன் இலங்கைச் சிறுவர்கள் மனிதாபிமான உதவி தேவையுடையவர்களாக இருப்பதாகக் குறிப்பிடுகின்றது.

தேசிய உணவுப் பாதுகாப்பிற்கான ஜனாதிபதி செயற்குழுவின் தலைவர் 100,000 குடும்பங்கள் போசாக்குக்குறைபாடுடையவர்களாகவும், இதில் 75,000 பேர் பட்டினிச்சாவினை தவிர்ப்பதற்குப்

போராடிக்கொண்டிருக்கின்றனர் எனவும் வெளிப்படுத்தினார். ஏறக்குறைய 40,000 குடும்பங்கள் உணவு மற்றும் போசாக்கினை சேலைன்(Saline) மூலம் பெற்றுக்கொள்கின்றனர்.

இடைக்கால பாதீடானது இப்பிரச்சனையின் தீவிரத்தன்மையினையோ அல்லது தேவைப்படும் உதவியின் அவசரத்தன்மையினையோ பிரதிபலிக்கவில்லை. துரதிஸ்டவசமான விளைவுகளை ஏற்படுத்திய உர இறக்குமதி தடை மற்றும் எரிபொருள் நெருக்கடியின் பின்னர் சவால்களை எதிர்கொள்கின்ற விவசாயத்துறை போன்றவற்றினையும் இது மீட்டெடுக்கத்தவறியுள்ளது. கல்வித்துறைகூட, பாடசாலைக்கல்விக்கு ஏற்பட்ட மிகநீண்டகால தடங்கல்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் தீவிரமான போசாக்குக்குறைபாடு நிலவுதல் போன்றவற்றின்பின்பும் போதுமானளவு ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளவில்லை.

பாதீடானது, சனத்தொகையின் பெரும்பகுதியினர் அண்மைக்காலங்களில் வறுமைக்குள் வீழ்ந்திருக்கின்றனர் என்கின்ற உண்மைக்குப் பதிலளிவில்லை. நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கென 2.9பில்லியன் அமெரிக்க டொலர்கள் 48 மாத ஏற்பாட்டுடன் சர்வதேச நாணய நிதியத்தின் காலநீடிப்புடனான நிதி உதவியின்கீழ்(Extended Fund Facility (EFF) பணியாளர் நிலை (Staff-Level Agreement (SLA) ஒப்பந்தத்தினை எட்டியுள்ளது. ஆயினும், அக் கொள்கைப் பரிந்துரைகள் மக்களுக்கு மிகவும் குறைந்தளவிலான ஆறுதலையே தரக்கூடியவாறான தீவிரமான சிக்கனப்படுத்தல் நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளன. பொதுச் செலவுகளை(social spending) அதிகரிப்பது தொடர்பில் அது குறிப்பிட்டிருந்தாலும், அது நிதிப் பரிமாற்றம்( cash transfers) மற்றும் இலக்குவைக்கப்பட்ட ஆதரவு போன்ற கட்டமைப்புக்குள்ளேயே இருக்கின்றது, இது நெருக்கடியினை எதிர்கொள்வதற்குப் போதாமையுடையதாக இருக்கின்றது. சர்வஜன சமூகப் பாதுகாப்பிற்கான பெண்கள் குழுக்களின் தொடர்ச்சியான கோரிக்கைகள் குறிப்பாக பொருளாதார நெருக்கடியின்போது, மீண்டும் இன்னுமொருதடவை புறக்கணிக்கப்பட்டுள்ளன. இடைக்கால பாதீட்டின் தீவிரமான மக்கள் எதிர் நிலைப்பாடு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கூருணர்வற்ற பரிந்துரைகள் சந்தேகத்திற்கிடமின்றி சுமையினை பெண்கள், தொழில்புரியும் மக்கள் மற்றும் இலங்கையின் ஏழைமக்கள் போன்றோர்மீது திருப்பிவிடுகின்றமையானது மிகத்தீவிரமான கவலைக்குரியவிடயமாக உள்ளது.

**சக்தி வறுமை** - சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளில் எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான ‘பெறுமதி மீட்பு விலைநிர்ணய’ (cost recovery pricing) பொறிமுறை உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. ஆகஸ்ட் மாதத்தில், இலங்கை மின்சார சபையானது கடந்த ஒன்பது ஆண்டுகளில் முதன்முறையாக மின்சாரத்திற்கான கட்டணங்களை உயர்த்தியது. மிகவும் குறைந்தளவில் நுகர்பவர்கள் - மாதத்திற்கு 30 அலகுகளுக்குக் கீழ் - கட்டணங்களில் 264%இனால் பாரிய அதிகரிப்பினை காண்பார்கள்(30-60 அலகுகளுக்கு 211% அதிகரிப்பு). வீட்டுத்தேவைகளுக்கு மின்சாரத்தினை நுகர்பவர்களில் அரைவாசிப்பேர் - 60 அலகுகளை விடவும் குறைவாக நுகரும் 3.14 மில்லியன் பேர் - மின்சாரக்கட்டணத்தில் பாரிய அதிகரிப்பினை எதிர்கொள்வார்கள்.

The electricity tariff hikes contradict the principles of energy justice, with women bearing the biggest burden of these increases. Cost-cutting measures in households usually fall on women. Energy saving efforts in the kitchen affect nutrition, with households cooking fewer meals. The gendered impact of energy poverty will constrain a generation of women and girls, strip them of time, and inhibit their access to education and the workforce. Energy precarity will increase among households that had already accumulated unpaid electricity bills during the Covid-19 lockdowns and push them deeper into a cycle of debt. Although Sri Lanka has enjoyed almost 100% electrification,

the tariff changes will plunge households into darkness. The kerosene price hike from Rs. 87 to Rs. 340 had a particularly debilitating impact on the rural economy. Fishermen are unable to use boats and engage in their livelihood activities because of kerosene shortages and price hikes. Small-scale farmers rely on kerosene to run water pumps for cultivation. The increase in the price of kerosene will prevent farmers from engaging in production, thereby impacting food security.

சக்தி நீதிக்கான கோட்பாடுகளுக்கு முரண்பாடானவிதத்தில் இவ்அதிகரிப்பின் சுமையினை பெண்கள் தாங்கும்விதத்தில் மின்சாரக்கட்டணங்கள் உயர்வடைந்துள்ளது. வீட்டுச்செலவினைக் குறைக்கும் நடவடிக்கைகள் அநேகமாக பெண்கள்மீதே சுமத்தப்படுகின்றன. சமையலறையில் சக்தியினைச் சேமிக்கும் முயற்சியில், சில உணவுகளை மட்டுமே சமைப்பதனால் இது போசாக்கினையும் பாதிக்கின்றது. சக்தி வறுமையினால் ஏற்படும் பால்நிலைசார் பாதிப்புக்கள் ஒரு தலைமுறையினைச்சேர்ந்த பெண்கள் மற்றும் சிறுமியரை அவர்களின் நேரத்தினைப் பறித்து, கல்வியினைப் பெற்றுக்கொள்வதனையும் தொழிற்சக்தியினையும் தடுத்து தடைகளை உருவாக்கும். சக்தியினைப் பெற்றுக்கொள்வதிலுள்ள நிச்சயமற்றதன்மையானது, கோவிட்-19 முடக்கங்கள் ஏற்படுத்தப்பட்ட காலப்பகுதியில் கட்டப்படாமல் ஒன்றுசேர்ந்திருந்த பற்றுச்சீட்டுக்களைக் கொண்டிருக்கும் வீடுகளில் அதிகரிப்பதுடன், அவர்களை கடன்வட்டத்திற்குள் தள்ளிவிடும். இலங்கையானது, 100% மின்சாரத்தினை அனுபவித்திருக்கின்றபோதும், கட்டண அதிகரிப்புக்கள் வீடுகளை இருட்டிற்குள் மூழ்கடிக்கும். மண்ணெண்ணை விலை 87ரூபாயிலிருந்து 340 ரூபாயாக அதிகரித்தமையானது, குறிப்பாக கிராமிய பொருளாதாரத்தினை வலுவிளக்கச்செய்யும் விளைவினைக் கொண்டிருந்தது. மண்ணெண்ணை பற்றாக்குறை மற்றும் விலை உயர்வு போன்ற காரணங்களினால் மீனவர்கள் தமது படகுகளைப் பயன்படுத்தி வாழ்வாதார செயற்பாடுகளில் ஈடுபடமுடியவில்லை. சிறியதர விவசாயிகள் பயிர்ச்செய்கைக்கு நீர்இறைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு மண்ணெண்ணையில் தங்கியிருக்கின்றார்கள். மண்ணெண்ணையின் விலை அதிகரிப்பானது, விவசாயிகளை உற்பத்தியில் ஈடுபடாமல் தடைசெய்யும், அதனூடாக உணவுப்பாதுகாப்பிற்கு பாதிப்பினை ஏற்படுத்தும்.

**சிதறிப்போகும் கல்வி அடைவுகள்** - இலங்கையிலுள்ள ஏறக்குறைய அரைவாசி சிறுவர்கள் பொருளாதார நெருக்கடிக்கு முன்னரே வறுமையில் வாழ்கின்றார்கள், ஐக்கிய நாடுகளின் கூற்றுப்படி நான்குவயதிற்குட்பட்ட குழந்தைகளில் மூன்றில் ஒருவர் நிறைகுறைந்தவராக அல்லது உயரம்குறைந்தவராக இருக்கின்றார். கல்வித்துறையானது ஒரு நெருக்கடியான காலப்பகுதியினை எட்டியுள்ளது என்பதனை கல்வி அமைச்சானது ஏற்றுக்கொண்டுள்ளது. கற்றல் இழப்பானது (2020இல்) 54% மற்றும் (2021இல்) 88%இனை எட்டியிருக்கும்நிலையில் கோவிட்-19 சூழ்நிலையினைவிடவும் பொருளாதார நெருக்கடியினை எதிர்கொள்வது மிகவும் சவாலானதாகும். பொருளாதார நெருக்கடியானது மாணவர்களைப் பாடசாலைக்குப் பதிவுசெய்வதில் குறைவுஏற்படுவதற்குப் பங்களிப்புச்செய்துள்ளது. சேவ் த சில்றனின்(Save the children) கூற்றுப்படி பாடசாலை உணவுத் திட்டத்திற்கான நிதியினை அரசாங்கம் குறைக்கும்போது, நான்கில் ஒரு மாணவரை பசியுடன்விடுகின்றது. எழுந்தமானமுறையில் பாடசாலைகளை மூடுதலானது மாணவர்களை பசியில் விடுகின்றது, ஏனெனில் நாட்டில் மிகவும் நலிவுற்றநிலையிலிருக்கும் ஒரு மில்லியன் சிறுவர்களுக்கு இலவச பாடசாலை உணவுகளே உயிர்நாடியாக இருக்கின்றது. ஐந்திற்கு இரண்டு வீடுகளிலுள்ள சிறுவர்கள் இணையவழிக்கற்கை மூலம் கல்வியினைத் தொடர முடியவில்லை ஏனெனில் அவர்களது குடும்பங்களுக்கு இணையத்திற்கான செலவுகளோ அல்லது திறன்பேசிக்கான செலவுகளோ கட்டுப்படியாகவில்லை. இலவசமான பொது கட்டமைப்பு மூலம் அடைந்துகொண்ட உயர்ந்தளவிலான எழுத்தறிவு மட்டம் மற்றும் பெண்களுடைய கல்வி போன்ற கல்வி அடைவுகளானவை இந் நெருக்கடியின் மத்தியில் சிதறிப்போகின்றன.

**பெண்களின் ஊதியம் வழங்கப்படுகின்ற/ஊழியம் வழங்கப்படாத உழைப்பினைச் சுரண்டுதல்**

அரசாங்கமானது நெருக்கடியின் மத்தியில் புதிய சட்டங்களை விரைவுபடுத்துவதற்கான தேவையினைக் கண்டுள்ளது. அமைச்சரவையானது 1954ம் ஆண்டின் கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களுக்கு அனுமதியளித்தது, இது வர்த்தக செயன்முறைகளுக்கு வெளிவாரியாக(Outsourcing firms) பணிக்கமர்த்தும் நிறுவனங்களில் பெண்கள் இரவில் வேலைசெய்வதற்கு சட்டரீதியாக அனுமதியளிக்கும். புலம்பெயர் தொழிலாளர்களுக்கான வயதெல்லையானது 25இலிருந்து 21ஆக குறைக்கப்பட்டுள்ளது, பிள்ளைகளைக்கொண்டிருக்கின்ற (2 வயதிற்குட்பட்ட) பெண்களை புலம்பெயரவிடாமல் தடுக்கும் கட்டுப்பாடுகள் மற்றும் புலம்பெயர்வதற்கு முன்னர் கட்டாயமாக்கப்பட்டிருந்த குடும்பப் பின்னணி தொடர்பான அறிக்கை பெறப்படல் போன்றன நீக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளர் அமைச்சானது சிறுவர்களை( 16 மற்றும் அதற்கு மேற்பட்ட) தொழில் செய்ய அனுமதிக்கும்வகையில் தற்போதுள்ள சட்டங்களில் திருத்தத்தினை ஏற்படுத்துவதற்கென செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

ஜீன் 2022 வரையான இந்த ஆறு மாத காலப்பகுதியில், கிராமிய ஏழைமக்களில் 777 பேர் - 2021ம் ஆண்டில் இருந்ததைவிடவும் நான்கு மடங்கு அதிகமானோர் - இலங்கையைவிட்டு தினமும் புலம்பெயர் தொழிலாளர்களாக செல்கின்றனர். தொழிலாளர் சட்டங்கள் மிகவும் நெகிழ்ச்சித்தன்மையுடையவையாக மாற்றப்பட்டிருக்கின்ற அதேவேளை, தொழில் நிபந்தனைகள் சுரண்டலுக்குட்படுத்துகின்றதும் ஆபத்தானவையுமாக தொடர்கின்றன. 2020இல் 114 இலங்கைத் தொழிலாளர்கள் தமது தொழில்புரியும் இடங்களில் இறந்திருக்கின்றார்கள், இத்தகைய ஆபத்துக்களுக்களை எதிர்கொள்ளக்கூடியவகையில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொண்டிருக்கப்படவில்லை. இவ்வாறிருக்க, பல கிராமிய ஏழைமக்கள் புலம்பெயர்வதற்குத் தள்ளப்படுகின்றார்கள். பாதுகாப்பான பணி நிபந்தனைகள், சமமான ஊதியம், பராமரிப்பு வழங்குவதற்கான பொறிமுறைகள் போன்றவற்றிற்கான முறையான கட்டளைகள் ஏதுமின்றி தொழிலாளர் சட்ட திருத்தத்தின்கீழ் முதலில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் இலக்குவைக்கப்படுவதானது கவலைக்குரியதாகும். பொதுத்துறைசார் தொழில்வாய்ப்பு போன்ற பெண்களுக்கு மேம்பட்ட பணி நிபந்தனைகளைக் கொண்டிருக்கின்ற தொழில்கள் சிக்கனப்படுத்தல் நடவடிக்கைகளின்கீழ் நீக்கப்பட்டிருக்கின்றன. அரச தொழிலாளர்களை ஊதியமற்ற விடுமுறையினை எடுத்துக்கொண்டு வெளிநாடுகளில் கூடியது ஒரு ஐந்து வருடகாலப்பகுதிக்குப் பணிபுரிந்து கட்டாய அந்நியச்செலாவணியினை நாட்டிற்கு அனுப்பிவைக்கும்படி ஒரு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

வேலைக்குச்செல்வதனை இலகுபடுத்துவதற்கும், கட்டாயமான மாதாந்த வெளிநாட்டு அந்நியச்செலாவணியினை வீட்டிற்கு அனுப்பிவைக்குமாறும் ஒரு சுற்றறிக்கையொன்று வெளியிட்டுள்ளது.

உள்நாட்டில் தொழில்களை உருவாக்குவதற்கான எந்த திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை. பதிலாக, வெளிநாட்டு நாணயப்பரிமாற்றத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான இலகுவான வழியாக தொழிலாளர்கள் புலம்பெயர்வதனை, தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நல்வாழ்வு தொடர்பான மிகவும் குறைந்தளவான கரிசனையுடன் ஊக்குவிக்கின்றனர். மேலும், இடைக்கால பாதீடானது அரச தொழிலாளர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையினை 65இலிருந்து 60ஆக குறைப்பதற்கு முன்மொழிந்துள்ளது, அதனூடாக மக்களை ஓய்வுபெறுவதற்கு நிர்ப்பந்திப்பதுடன் அவர்களது நிதிசார் பாதுகாப்பினை தாமாகவே கண்டுபிடித்துக்கொள்வதற்கும் கட்டாயப்படுத்துகின்றது. சர்வதேச நாணய நிதியமானது தொழிலாளர் சக்தியில் பெண்களின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு கட்டுப்பாடுகளை தளர்த்தும்படி பரிந்துரைசெய்திருக்கின்றது. பெண்களின் உழைப்பு தொடர்பான இத்தகைய மாற்றங்கள் பெரும்பாலும் பெண்களுக்கு அதிக 'தெரிவினை' வழங்குதல் தொடர்பான தாராளவாத வாதத்துடன் வருகின்றன. வீட்டிற்கு வெளியில் வேலைசெய்வதானது அநேகமாக பயங்கரமான பணிநிபந்தனைகளுடனும் மற்றும் மிகவும் குறைந்தளவிலான ஊதியத்திற்குமாகும் என்கின்ற உண்மையினை எதிர்கொள்வதற்கு அது தவறுகின்றது மற்றும் சாத்தியமானவரையில் வேண்டுமென்றே நிராகரிக்கின்றது. தொழில்புரிவதற்கான தெரிவு என்பது பெண்களை சுரண்டலுக்கும் பாரபட்சத்திற்கும் வெளிப்படுத்தும் உள்நோக்கத்துடனான கொள்கைகள் மூலம் அரசாங்கம் பொருளாதார

சூழ்நிலைக்கு பதிலிறுக்கும்முறையே அன்றி வேறெதுவுமில்லை. பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு தொடர்பான உரையாடல்களில் ஊதியமற்ற பராமரிப்பு, வேலை மற்றும் சமூக மீளுற்பத்தி ஆகியவை புறந்தள்ளப்பட்டிருக்கின்றன.

அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்வதற்கான பணவருவாயினைப் பெற்றுக்கொள்வதற்கு, பெண்கள் தாம் ஈடுபடுகின்ற வீட்டுவேலைகளுக்கு மேலதிகமாக ஊதியமுள்ள தொழிலில் ஈடுபடுவதற்கு கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள். நடைமுறையில், பராமரிப்பு பணியில் பெண்களது பங்களிப்பதுதொடர்பான அங்கீகாரமற்றநிலையில் தொழிலாளர் சக்தியில் பங்குபற்றுவதென்பது பெண்கள்மீது இரட்டிப்பான சுமையினை சுமத்துவதாகும். பணவருவாயினை பெற்றுக்கொள்ளவேண்டிய தேவை மற்றும் அதன்மூலமான பெண்கள்மீதான சுமை போன்றவை எரிபொருள் மற்றும் சக்தி போன்ற உணவல்லாத அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்திருக்கின்ற சூழ்நிலையில் மேலும் மோசமடைந்திருக்கின்றது. ஆண்களுக்கு அன்றாட கூலித்தொழில் வாய்ப்புக்கள் குறைவடைந்தபோது பெண்கள் ஊதியத்துடனான உழைப்பு மற்றும் ஊதியமற்ற உழைப்பு போன்றவற்றில் ஈடுபடும் சுமையினையும் எதிர்கொள்கின்றார்கள்.

கோவிட்-19 காரணமாக ஏற்பட்ட பால்நிலைசார் பாதிப்புக்கள் தொடர்பில் அம்பாரை மாவட்டத்தின் இரண்டு பிரதேசசெயலாளர் பிரிவுகளில்(காரைதீவு மற்றும் சம்மாந்துறை) மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கற்கையில், 46% பெண்கள் வீட்டில் தமது பராமரிப்பு பணிகள் பெருந்தொற்றின்காரணமாக அதிகரித்திருப்பதாகவும், 37.5% ஆனோர் வருமானக்குறைவின் காரணமாக தமது உணவு நுகர்வினை குறைத்திருப்பதாகவும் கூறினர். மூன்று ஆண்டுகளாக பெண்கள் குடும்பம் பிழைத்திருப்பதனை முகாமைசெய்துவரும் சுமையினைச் சுமப்பதென்பதும், தற்போது கட்டமைப்புரீதியான சீர்திருத்தங்கள் எனும் பெயரில் மோசமான பணி நிபந்தனைகளைநோக்கி தள்ளப்படுகின்றமையும் எச்சரிக்கையளிக்கின்றன.

**அடக்குமுறை மற்றும் சிக்கனப்படுத்தலுக்கு முற்றுப்புள்ளி வைத்தல்** ஆர்ப்பாட்டமானதோர் வருடத்தின் காலிறுதிப்பகுதியை நாம் அண்மிக்கையில், பொருளாதார நெருக்கடியின் ஆழம் மற்றும் அதன் பாரதூரமான விளைவுகள் போன்றவை தெளிவாக தெரிகின்றன. இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற சிக்கனப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் அடக்குமுறை ஆகிய இரண்டு தந்திரோபாயங்களும் அதிகளவிலான துயரத்தினை மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றன, அத்துடன் மீட்பிற்கான எமது நம்பிக்கையினையும் சிதைத்திருக்கின்றன. அரசாங்கமானது செயற்பாட்டர்கள் தமது எதிர்ப்பினைத் தெரிவிக்கும் உரிமையினைப் பயன்படுத்துவதற்காக அவர்களை அச்சுறுத்தல், தொல்லைசெய்தல், அடிப்படையற்ற விசாரணைகளை மேற்கொள்ளுதல் மற்றும் கைதுசெய்தல் போன்றவற்றினை உடனடியாக நிறுத்தவேண்டும். நீதியற்ற முறையில் இளைஞர்களை தடுத்துவைக்கும் கொடூரமான பயங்கரவாதத்தடுப்புச் சட்டமானது நீக்கப்பட வேண்டும், அத்துடன் இது மற்றுமொரு சட்டத்தினால் மாற்றீடு செய்யப்படக்கூடாது.

சர்வஜன உணவு விநியோகத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன்மூலமும், தற்போதுள்ள சதொச, சமுர்த்தி மற்றும் கூட்டுறவுச்சங்கங்கள் போன்றவற்றினை விரிவுபடுத்துவதன்மூலமும், போசாக்கு மற்றும் உணவு இறையாண்மையினை முன்னுரிமைப்படுத்தல். இக்கட்டான சூழ்நிலைகளிலும் வறுமையிலும் வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கையில், உணவு மற்றும் உணவுப்பாதுகாப்பு கொடுப்பனவுகளுக்காக சர்வஜன திட்டங்களை நோக்கி நகர்வது இன்றியமையாததொன்றாகும். பரவலான தட்டுப்பாட்டின் மத்தியில் இலக்குவைக்கப்பட்ட திட்டங்களை முன்னெடுக்கமுயற்சிக்கையில் அவை அதிருப்தி மற்றும் சமூக அமைதியின்மைக்கு இட்டுச்செல்லும். எரிபொருள், மின்சாரம், நீர், மண்ணெண்ணை, எரிவாயு, மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான அனைத்து குடும்பங்களுக்குமான மானியங்கள் சிதைக்கப்படக்கூடாது.

தீவிரமடைந்துவரும் உணவு நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் உடனடியான ஆதரவு மற்றும் மானியங்கள் சென்றடையவேண்டும். மேலும், பாடசாலை இடைவேளை உணவிற்குத் தேவையான வளங்கள் நன்கு வழங்கப்பட்டிருப்பதையும், அவை

நன்றாக நடைமுறைப்படுத்தப்படுவதையும் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் உறுதிப்படுத்துவது அவசியமாகும். பட்டினி, வீடற்றநிலை, வறுமை, மற்றும் குடும்ப வன்முறை போன்றவற்றினை எதிர்கொள்வதற்கான உதவித்திட்டங்கள் (பரிந்துரைசெய்தல், ஆதரவு மற்றும் சேவைகள்) அரசாங்கத்தினால் உடனடியாக ஏற்படுத்தப்படவேண்டும், அத்துடன் அரச அதிகாரிகள் பாரபட்சம், முற்கற்பிதம், அல்லது தீர்ப்பிடல் போன்றவை ஏதுமின்றி இச்சேவைகளை வழங்குவதற்கு வழிநடத்தப்படவேண்டும். பாலியல் மற்றும் பால்நிலையினை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையானது தெளிவாகக்காணப்படுவதனால், அரச மற்றும் அரசசார்பற்ற சேவைகள் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான தங்குமிடம் உட்பட்ட ஆதரவு சேவைகளை உறுதிப்படுத்த வேண்டும். பதிலிறுப்பு நடவடிக்கைகள் உரிய நேரத்திற்கு பாதிக்கப்பட்டு உயிர்பிழைத்திருப்பவரை மையப்படுத்தியதாக வழங்கப்படல் வேண்டும். இறுதியாக, சுரண்டலுக்குட்படுத்துகின்ற தொழிலாளர் சட்டங்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் நீக்கப்படவேண்டும்.

அரசு மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவை நாட்டின் கடனைச் செலுத்தும் சுமையினை பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீது சுமத்தவும், அவர்களை பாதுகாப்பற்ற சுரண்டலுக்குட்படுத்தும்விதமான பணிநிபந்தனைகளுக்கு தள்ளவும் முடியாது. அனைத்து துறைகளிலும் குறுகிய காலத்தில் மிகவும்வேகமாக அதிகரித்துவரும் வாழ்க்கைச்செலவிற்கேற்ற வாழக்கூடியளவிற்கான ஊதியம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். நீதியற்ற மற்றும் சுரண்டலுக்குட்படுத்தும்விதமான தொழிலாளர் நடைமுறைகள் தொடர்பான தொழிலாளர்களின் முறைப்பாடுகளை எதிர்கொள்வதற்கான பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அதிகரித்துவரும் ஊதியமற்ற பராமரிப்பு வேலைகளின் சுமையானது அங்கீகரிக்கப்பட வேண்டும், பெண்கள் எதிர்கொள்ளும் தீவிரமான அழுத்தங்களிலிருந்து அவர்களுக்கு ஆறுதலளிப்பதற்கு தினப்பராமரிப்பு(பெற்றோர் வேலைசெய்யும்போது பிள்ளை பராமரிப்பு), வயதுமுதிர்ந்தோர் பராமரிப்பு, உணவு விநியோகம், உளசமூக உதவி போன்ற பொறிமுறைகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதன்மூலம் பெண்களின் ஊதியமுள்ள மற்றும் ஊதியமற்ற உழைப்பானது நாட்டினது வளர்ச்சிக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

பொருளாதார நீதிக்கான பெண்களின் குழுமமானது, இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியினை பகுப்பாய்வு செய்து அதற்கான முன்மொழிவுகளை மேற்கொள்வதற்காக ஒன்றிணைந்த, இலங்கையின் பல்வேறுபட்ட பிரதேசங்களில் பணிபுரிகின்ற பொருளியலாளர்கள், கல்வியறிஞர்கள், பெண்ணிலைவாத செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சட்டத்தரணிகள் போன்றோரை உள்ளடக்கிய குழுமமாகும்.